Publication : Viduthalai

Date : Nov 12, 2011

# அய் டிஸ்கவரியின் எக்ஸீட் முதன்மையான கல்வி திட்டம்

உயர்ந்த தரத்திலான கற்றுக் கொள்ளும் முறை தலைமைப்பண்பு மதிப்பீட்டுத் திறன் ஆகியவற்றுக்கு முக்கியத்துவம் அளிக்கும் 'அய் டிஸ்கவரி கல்வி' ஒரு புதுமையான முன்னணி நிறுவனமாகும். இதன் முதன்மையான திட்டமான எக்ஸீட், தரமான கற்பித்தல் மற்றும் கற்றுக் கொள்வதற்கான விரிவான தீர்வாகும். ஹார்வர்ட், கேம்பிரிட்ஜ், அய்அய்எம், அய்அய்டியின் முன்னாள் மாணவர்கள் இதை வழி நடத்துகிறார்கள், முன்னாள் பள்ளி முதல்வர்கள், கல்வி நிபுணர்கள் மற்றும் குழந்தை உளவியலாளர்கள் இதன் பாடத்திட்ட தயாரிப்பில் பங்கு கொண்டுள்ளனர்.

இந்நிறுவனத்தின் சார்பில் ஆண்டுதோறும் நடைபெறும் எக்ஸீட் 'நாளைய பள்ளிகள் 2011' என்ற கருத்தரங்கு சென்னையில் நடைபெற்றது. இதில் சிறந்த கற்பிக்கும் வழிமுறைகள் மற்றும் திட்டங்கள் மூலம் கல்வித் தரத்தை மேம்படுத்த வேண்டியதின் தேவை குறித்து முன்னோடி கல்வியாளர்கள் வலியுறுத்தினார்கள். 'எல்லைகளைக் கடந்த கல்வி' என்ற தலைப்பில் நடைபெற்ற இந்த கருத்தரங்கில் புதுடில்லி, சென்னை, மும்பை, அய்தராபாத் ஆகிய நகரங்களைச் சேர்ந்த 1500 பள்ளித் தலைவர்கள் கலந்து கொண்டனர். அரசுப் பள்ளிகள் மற்றும் தனியார் பள்ளிகளிலும் தரமான நவீன தொழில்நுட்ப கல்வி கற்றலை மேம்படுத்த திட்டம் மேற்கொண்டுள்ளோம் என அய்டிஸ்கவரியின் நிறுவனத்தின் நிருவாக இயக்குநர் ஆஷிஷ் ராஜ்பால் தெரிவித்துள்ளார்.